# ஒரு மதிப்பெண்
# வினா - விடை
# இயல் ( 1 - 9 )

இயல் 1

1 . ' மெத்த வணிகலன் ' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

2. ' காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் ' நிலத்துக்கு நல்ல உரங்கள் . இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .
ஈ ) சருகும் சண்டும்

3. எந்தமிழ்நா என்பதை பிரித்தால் எவ்வாறு வரும் .
இ ) எம் + தமிழ் + நா

4. ' கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது ' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
ஈ ) பாடல் கேட்டவர்

5. வேர்க்கடலை , மிளகாய் விதை , மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
ஆ ) மணிவகை

இயல் -2

6. ' உனக்கு பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம் ' - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை ?
ஆ ) மோனை , எதுகை

7. செய்தி : 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் - 15 ஐ உலகக் காற்று நாளாக ரன்னர்கொண்டாடி வருகிறோம் .
செய்தி : 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடம் என்பது எனக்கு பெருமையே .
செய்தி : 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள் .

ஈ ) செய்தி 1 , 3 ஆகியன சரி

8 . " பாடுஇமிழ் பனிக் கடல் பருகி " என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது ?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்

9. 'பெரிய மீசை ' சிரித்தார்- வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது ?
இ ) அன்மொழித்தொகை

10. பொருந்தும் விடை வரிசையை தேர்ந்தெடுக்க ,
ஆ) 3 , 1 , 4 , 2

பொருத்தமானவை :
அ ) கொண்டல் - கிழக்கு
ஆ) கோடை - மேற்கு
இ) வாடை - வடக்கு
ஈ ) தென்றல் - தெற்கு

இயல் - 3

11. பின்வருவனவற்றுள் முறையான தொடர் -
இ) தமிழர் பண்பாட்டின் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு .

12. " சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி " என்னும் அடியில் பாக்கம் என்பது - ஈ ) சிற்றூர்

13. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்த காரணமாக அமைவது _____ அ) வேற்றுமை உருபு

14 . காசிக்காண்டம் என்பது -
இ ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

15 . விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் , கருங்கோட்டுச் சீரியாழைப் பணயம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு . இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
ஆ ) இன்மையிலும் விருந்து

இயல் - 4

16. உனதருளே பார்ப்பன் அடியேனே - யார் கூறியது ?
ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

17. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க .
தலைப்பு : செயற்கை நுண்ணறிவு
குறிப்புகள் : கண்காணிப்பு கருவி , அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் தமிழ் படம் திருப்புகிறது . திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது .
அ) தலைப்புக்கு பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
18 .பரிபாடல் அடியில் ' விசும்பும் இசையும் ' என்னும் தொடர் எதனை குறிக்கிறது ?
ஈ) வானத்தையும் பேரொலியையும்

19 . குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டு அம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார் . பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் .ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே.... இ ) பால் வழுவமைதி , திணை வழுவமைதி

20. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ? ஈ) இலா

இயல் -5
21. ' மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரி சங்கம் வைத்தும் ' என்னும் சின்னமனூர்ச் செப்பேடுக் குறிப்பு உணர்த்தும் செய்தி அ ) சங்க காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது .

22. அருந்துணை என்பதைப் பிரித்தால் __________ அ ) அருமை + துணை

23. " இங்கு நகரப் பேருந்து நிற்குமா ? என்று வழிப்போக்கர் கேட்பது ______ வினா. " அதோ , அங்கே நிற்கும் " என்று மற்றொருவர் கூறியது ____ விடை .இ) அறியா வினா, சுட்டு விடை

24 ." அருளைப் பெருக்கி அறிவை திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை "
- என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ? இ) கல்வி

25 . இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர்______ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ______ ஈ) மன்னன் , இறைவன்
இயல் - 6

26. குளிர் காலத்தைப் பொழுதாக கொண்ட நிலங்கள் _______
இ) குறிஞ்சி , மருதம் , நெய்தல்

27. ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடுகின்றனர் . இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது ?
இ ) ஒயிலாட்டம் , இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது .

28 . மலர்கள் தரையில் நழுவும் - எப்போது ?
ஆ) தளரப் பிணைத்தால்

29 . கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர் . இத்தொடருக்கான வினா எது ?
ஈ ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?

30. கோசல நாட்டில் கோடை இல்லாத காரணம் என்ன ?
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

இயல் -7

31. சரியான அகர வரிசையை தேர்ந்தெடுக்க .
இ) உழவு , ஏர் , மண் , மாடு

32. ' மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் ' மாலவன் குன்றம் வேலவன் குன்றமும் முறையே ..
அ) திருப்பதியும் திருத்தணியும்

33. " தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன் " என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் ...
ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

34. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்______
இ) வலிமையை நிலைநாட்டல்

35. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது_____ ஈ) சிலப்பதிகாரம்

இயல் -8

36. மேன்மை தரும் அறம் என்பது ____
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது .

37. " வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் " இவ்வடி குறிப்பிடுவது______
இ ) இடையறாத அறப்பணி செய்தல்

38. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்ட படுவோர் ..
ஆ) அதியன் , பெருஞ்சாத்தன்

39. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் _____
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது .

40 . சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்துள்ள பாவினம் ______
அ) அகவற்பா

இயல் - 9

41 ." இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும் " __ இவ்வடிகளில் கற்காலம் என்பது
ஈ) தலையில் கல் சுமப்பது

42 . சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

43. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ___________ வேண்டினார்
அ) கருணையன் எலிசபெத்துக்காக

44. வாய்மையே மழை நீராகி __ இத்தொடரில் வெளிப்படும் அணி .
இ) உருவகம்

45 . கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் _ இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது
ஆ ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

ஞா. ஜோ. அந்தோனி பிரகாஷ்,
இளநிலை பட்டதாரி ஆசிரியர்,
தொன் போஸ்கோ மேல்நிலைப் பள்ளி,
மதுரை.

www.Padasalai.Net